(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 32.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, செத்தெம்பர் 07, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0006/'10

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(ஆ) (i) இலங்கையில் காணப்படும் கமநல மத்திய நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவை யாவை என்பதையும்,

(iii) கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் உள்ள குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) குத்தகை விவசாயிகளின் முகவரிகளை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலொன்றை கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் பெற்றுத் தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0036/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கிரிபத்கொட, நுகேகொட, தெகிவல, கடவத்த, கொட்டாவ மற்றும் உறுகொடவத்த ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் ஒவ்வொன்றினதும்,

(i) கட்டிட நிர்மாணச் செலவையும்,

(ii) நீளம் மற்றும் தளப் பரப்பு ஆகியவற்றையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) அவை சாதாரண சீமெந்துக் கட்டமைப்பில் கட்டப்பட்டிருந்தால், அவை ஒவ்வொன்றினதும் கட்டிட நிர்மாணச் செலவு எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிர்மாணங்கள் தொடர்பாக, விலை மனுக்கள் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், கிடைக்கபெற்ற போட்டி விலை மனுதாரர்களின் பெயர்களையும்,

(iii) இக்கட்டிட நிர்மாணத்திற்கான. நிதி மூலங்கள் எவை என்பதையும்,

(iv) வட்டியுடன் கூடிய மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்,

(v) கடன் கட்டி முடிக்க வேண்டிய கால அளவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0051/ ‘10

3.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழான இடைக்காலக் கட்டளைகள், அகற்றப்படுவதற்கு அல்லது இறுதிக் கட்டளையாக மாற்றப்படுவதற்கு முன்னர், தொடர்ந்து செல்லுபடியாகக்கூடிய அதிகபட்ச கால அளவினையும்,

(ii) சட்டத்தில் இத்தேவைப்பாடு புறக்கணிக்கப்படக்கூடியதா என்பதையும்,

(iii) கடந்த இரண்டு வருட காலத்தில் இந்தத் தேவைப்பாடு கடைபிடிக்கப்படாத சந்தர்ப்பம் இடம் பெற்றுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறான சந்தர்ப்பம் நிகழ்ந்திருந்தால், அதற்காக உள்ள நிவாரனத்தையும்,

(v) சட்டத்தை மேலும் சிறந்த முறையில் கடைபிடிக்க ஊக்குவிக்குமுகமாக, சம்பந்தப்பட்டட எவரேனும் சட்ட அதிகாரிகளுக்கு உரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0120/ ’10

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் மருந்துப் பற்றாக்குறையொன்று தோன்றியுள்ளதாக 2010, மே மாதத்தில் வெளிவந்த ஊடக அறிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மருந்துப் பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மருந்து போன்ற அத்தியவசியப் பொருட்கள் போதியளவு களஞ்சியசாலைகளில் இருக்க வேண்டுமென்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா?

(ஈ) (i) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள நட்டம் அல்லது பெற்றுள்ள கடனின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், என்?

0267/ ‘10

5.

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 20 வருடங்களாக நிர்மாணப்பணிகள் தாமதமடைந்திருந்த, தேசிய எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாயுள்ள, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அதன் மூலம் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மெகாவோட் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) இந்நிர்மாணப்பணிக்காக செலவு செய்யப்படும் நிதி எவ்வளவென்பதையும்,

(iv) இம்மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் தாமதிக்கப்பட்டமையால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்,

(v) அப்பணிகளைத் தாமதமின்றிச் செய்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0305/ ‘10

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை ஆளொருவர் எத்தனை தவணைகள் வகிக்கலாம் என்பதையும்,

(ii) அத்தவணைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனின், எத்தனை தவணைகள் வரைக்கும் என்பதையும்,

(iv) அவ்வாறு தவணைகளை அதிகரிப்பதில்லையெனின் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் கருதுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0346/ ’10

7.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், பேருவளை நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடிசை வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீட்டினதும் உரிமையாளரின்/வதியும் குடும்பத் தலைவரின் பெயர், முகவரி யாதென்பதையும்,

(iii) மேற்படி வீடுகளில் வதியும் உப குடும்பங்களின் தலைவர்களது பெயர், முகவரி யாதென்பதையும், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

0037/ ’10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) பெருந்தொகையான இலங்கை கடற்றொழிலாளர்கள் வெளிநாடுகளில் தடுப்புக்காவலில் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 சனவரி தொடக்கம் இற்றைவரை வெளிநாடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவர்களில் இற்றைவரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0068/ '10

9.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், கரகஹவல, பிங்கம, மெதஆர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கரகஹவல, மெதஆர, ஹிங்கார வீதியில் 5கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0272/ '10

10.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வியியல் கல்லூரிகளிலும் மற்றும் பிற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் கல்விசார் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பில் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குவிடம் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளையும்,

(ii) அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற தீர்ப்புகளையும்,

(iii) மேற்படி தீர்ப்புகளுக்கு மதிப்பளித்து அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறான பதவிகளுக்கான விளம்பரங்களில் வயதுத் தேவைப்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட முரண்பாடுகளையும்,

(ii) இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்ப்புகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், ஆட்சேர்ப்புத் தேவைப்பாடுகள் தொடர்பில் முரண்பாடுகள் ஏதுமிருப்பின் அவற்றைத் திருத்துவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0293/ '10

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதற்கமைய, 9 மீற்றர் நீளமான 21000 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 3400 மரத்ததூண்களும் கொள்வனவு செய்வதற்காக விலை கோரப்பட்டது என்பதையும்,

(ii) குறைந்தபட்ச விலைகளைச் சமர்ப்பித்த அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்,

(iii) இரண்டாவதாக குறைந்தபட்ச விலைகளை சமர்ப்பித்த தென்னாபிரிக்க நிறுவனத்திற்கு கேள்விப் பத்திரம் அளிக்கப்பட்டதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 9 மீற்றர் நீளமான 10500 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 1700 மரத்தூண்களும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதையும்,

(ii) இதில் தென் மாகாணத்திற்கு விநியோகிக்கப்பட்ட 2363 தூண்களில் 73 தூண்கள் மட்டுமே பாவனைக்கு எடுக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறிய கேள்விப் பத்திரத்தை அளிக்காமையினால் ரூபா 79.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அந்த நட்டம் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0327/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை சுங்கத்திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ள சட்டரீதியற்ற பொருட்களுக்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிசுகள் மற்றும் கொடுப்பனவு களின் மொத்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் யாரென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு காரணமாக அமைந்த சம்பவங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iv) மேற்படி அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0069/’10

13.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைக்கு 8 வருடங்களுக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின், வதுகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கொலொன்கஹஹேன வீதியில் 300 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0093/ ’10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை இயங்கிவரும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(ii) தொழிற்சாலை ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்பட்ட போது அதிலிருந்த மொத்த வேலையாட்களின் எண்ணிக்கையையும்,

(iii) இற்றை வரை இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த வேலையாட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iv) மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களையும்,

(v) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த அளவு மற்றும் அதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தின் மொத்தப் பெறுமதி ஆகியவற்றை இலங்கை ரூபாவிலும், அமெரிக்க டொலர்களிலும் வெவ்வேறாகவும்,

(vi) இலங்கையில் உள்ள புடைவைக் கம்பனிகளின் எண்ணிக்கையையும், அவற்றின் உற்பத்தித் திறனையும், அங்கு நெசவு செய்யப்பட்ட மற்றும் பின்னப்பட்ட புடைவை வகைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ ராஜீவ விஜேசிங்க, — பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சர்வதேச நெருக்கடிகள் குழு என அழைக்கப்பபடும் ஓர் அமைப்பைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வமைப்பு இலங்கையில் தற்போது தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளளதா, அல்லது கடந்த பத்து வருடங்களில் இலங்கையில் இருந்தனரா என்பதையும், பிரதிநிதிகளைக் கொண்டிருந்தனரா என்பதையும்,

(ii) எவ் ஏற்பாடுகளின் கீழ் அது இலங்கையில் செயற்பட்டது என்பதையும்,

(iii) அதன் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு எவ்வாறு வீசா வழங்கப்பட்டது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) இவ் அமைப்பினால் இலங்கையில் வேலைக்கமர்த்தப்பட்ட இலங்கையர்களின் பெயர்களையும்,

(ii) அவர்களது கல்வி அல்லது ஏனைய தகைமைகளையும்,

(iii) சர்வதேச நெருக்கடிகள் குழுவினால் (ICG) அவர்கள் ஒவ்வொருக்கும் செலுத்தப்பட்ட தொகையையும், செலுத்தப்பட்ட அடிப்படையயும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அவ் அமைப்பு அல்லது அதன் ஊழியர்கள் எவராவது இலங்கைக்கு வரி செலுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களா என்பதையும்,

(ii) ஆம் எனில், அக்கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளனரா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பிற்கான பதினெட்டாவது திருத்தம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— மாகாண சபைகள் (திருத்தம்),— 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2010 செத்தெம்பர் மாதம் 8ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.3),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2010.09.08 ஆம் திகதி சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 ஓகத்து மாதம் 28 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஓகத்து 17, 2010) [1]

*4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 96,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*6.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*7.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*8.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*11.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “ சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---